**<u>முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

<u>OS.237/2009</u>

.....

2025 ஆண்டு நவம்பர் திங்கள் 25ம் நாள் DW1 என்பவரின் சாட்சியாகிய நபரின் வாக்குமூலம் (1876ம் ஆண்டின் 10வது விதியின் படி) திருமதி.சரஸ்வதி, இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் = ஜெகன்நாதன் விலாசம்

த/பெ. = குப்புப்பிள்ளை

வயது =

மதம் =

தொழில் =

தேதி

**<u>முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கில் முதல் பிரதிவாதி ஆவேன். இவ்வழக்கில் நான் எனக்காகவும் எட்டாம் பிரதிவாதிக்காகவும் சேர்த்து சாட்சியம் அளிக்கிறேன். எட்டாம் பிரதிவாதி என்னுடைய சகோதரி ஆவார். எனது பக்க முதல் விசாரணை நிருபண பிரமாண பத்திரிகையாக தாக்கல் செய்கிறேன். 30.06.1995 தேதியிட்ட என்னுடைய தந்தையின் பெயரில் உள்ள தோராய பட்டாவின் அசல் பி.வா.சா.ஆ.1 ஆகும். 15.09.2000 தேதியிட்ட என்னுடைய தந்தையின் பெயரில் உள்ள பட்டாவின் அசல் பி.வா.சா.ஆ.2 ஆகும். 17.07.2023 தேதியிட்ட நான் செலுத்திய சொத்து வரியின் இணைய ரசீது பி.வா.சா.ஆ.3 ஆகும். 05.03.2025 தேதியிட்ட என்னுடைய தந்தையின் பெயரில் உள்ள தண்ணீர் வரி ரசீதின் அசல் பி.வா.சா.ஆ.4 ஆகும். என்னுடைய தந்தையின் பெயரில் உள்ள மின் பயனீட்டு கட்டண அட்டையின் அசல் பி.வா.சா.ஆ.5 ஆகும். என்னுடைய பெயரில் உள்ள மின் பயனீட்டு கட்டண அட்டையின் அசல் பி.வா.சா.ஆ.6

ஆகும். இந்த வழக்கு நிலைக்கத்தக்கது என்ற காரணத்தினால் தள்ளுபடி செய்யுமாறு பிராத்திக்கிறேன்.

(வாதியின் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)

Sd/– K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்